**செய்தி வெளியீடு எண்: 225** **நாள்: 03.04.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

தமிழ்நாடு அரசு கருவூல விதிகளின்படி, தமிழக அரசு அலுவலகத்தில் ஓய்வு பெற்ற ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியர்கள் ஆண்டு தோறும் ஏப்ரல் மாதம் முதல் ஜூன் மாதம் முடிய நேர்காணல் நடைபெறும். இந்த ஆண்டு ஓய்வூதியர்களுக்கான நேர்காணல் 02-04-2018 முற்பகல் 8.30 மணி முதல் தொடங்கி சென்னை ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், ஒருங்கிணைந்த நிதித்துறை அலுவலக கட்டிடம், கால்நடை மருத்துவமனை வளாகம், 571, அண்ணாசாலை, நந்தனம், சென்னை-600 035 -ல் நடைபெற்று வருகிறது. இந்த நேர்காணல் பணி அனைத்து அரசு வேலை நாட்களிலும் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 2.00மணி வரை 02-04-2018 அன்று தொடங்கி 29-06- 2018 வரை நடைபெறும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**